கிண்ணியா நகர சபை

திருகோணமலை மாவட்டம்

1. நிதிக்கூற்றுகள்

1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மே 28 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தொம்பர் 11 ஆம் திகதி தலைவருக்கு வழங்கப்பட்டது.

1.2 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக கிண்ணியா நகர சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

சபை காசு மற்றும் அட்டுறு அடிப்படைகளில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்திருந்தது. எனினும் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டது என்ற கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பேரேடுகள், இரட்டைப் பதிவுகள் பின்பற்றாமை தொடர்பான மாதிரிக் கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. 2016 திசெம்பர் 31 ஆம் திகதிய ஐந்தொகை மீதிகளை 2017 சனவரி 1 ஆம் திகதிய ஐந்தொகை மீதிகளாக கொண்டுவராது வேறு தொகைகள் பதியப்பட்டிருந்தன. விபரம் வருமாறு.

| விபரம் | ஐந்தொகை மீதி | |
|---|---|---|
| | 31.12.2016 -- | 01.01.2017 |
| | ரூபா | ரூபா |
| கடன்பட்டோர் | (3,016,367) | 293,909 |
| கேள்வி வைப்பு | 3,554,099 | 4,546,696 |
| நூலக வைப்பு | 27,100 | 27,350 |
| நானாவித வைப்புக்கள் | 70,145 | 33,495 |
| கணக்காய்வு கட்டண ஏற்பாடு | 224,720 | 497,629 |

ii.

| விபரம் | 31.12.2017 | குறிப்பு |
| --- | --- | --- |
| | ரூபா | |
| முத்திரைக் கட்டணம் | 3,194,320 | ஆரம்ப மீதி ரூபா 5,740,020 தொகை கடந்த வருட நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. எனினும் இம்மீதியை உள்ளடக்கி மீளாய்வாண்டிற்கான இறுதி மீதி கணிக்கப்பட்டிருந்தது. |
| நீதிமன்ற தண்டப்பணம் | 8,510,774 | ஆரம்ப மீதி ரூபா 6,707,724 தொகை கடந்த வருட நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. எனினும் இம்மீதியை உள்ளடக்கி மீளாய்வாண்டிற்கான இறுதி மீதி கணிக்கப்பட்டிருந்தது. |
| காசு மீதி (புறநெகும) | 786,535 | காசேட்டு மீதி பூச்சியமாக காணப்படுகின்றது. |

(ஆ) புறநெகும செயற்திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் ரூபா 6,161,693 பெறுமதிக்கு நிர்மாணிக்கப்பட்டு 2015 ஆம் ஆண்டு சபைக்கு கையளிக்கப்பட்ட சுற்றுலா விடுதி நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகளின் கீழ் காட்டப்பட்டுள்ளமையினால் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதி அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) 2016 ஆம் ஆண்டில் சுற்றுலா விடுதியின் பயன்பாட்டிற்காக சபையினால் ரூபா 1,707,967 பெறுமதியான தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்ட போதிலும் அது நடைமுறையல்லாச் சொத்துக்களில் ரூபா 1,575,992 தொகையாகக் காட்டப்பட்டமையால் ரூபா 131,975 தொகை குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) 2016 ஆம் ஆண்டில் கேள்வி வைப்பு ரூபா 2,294,099 , நூலக வைப்பு ரூபா 4,500 மற்றும் ஏனைய வைப்புக்கள் ரூபா 11,380 என்பவற்றின் கூட்டுமொத்தம் ரூபா 2,309,680 தொகையினை திரண்ட நிதியில் செலவு வைத்தமையால் அம்மீதி அத்தொகையினால் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது.

(உ) 2016 ஆம் ஆண்டில் காணி கட்டிடம் மற்றும் பொறி உபகரணங்கள் ரூபா 22,255,930 தொகை கணக்குகளுக்கு கொண்டு வரும் போது செலவுப் பதிவு மூலதன பங்களிப்புக் கணக்கில் பதியப்படாமையால் செலவு மீதி அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

(ஊ) 2016 ஆம் ஆண்டிற்கான தேறிய இலாபம் ரூபா 2,254,021 தொகையினை திரண்ட நிதியில் சேர்க்கப்படாமையினால் திரண்ட நிதி அத் தொகையினால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(எ) 2017 திசெம்பர் 31 ஆம் திகதி காசேட்டின் படி வங்கி மீதி ரூபா 880,473 தொகையாகக் காணப்பட்ட போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 903,715 தொகையாகக் காட்டப்பட்டமையால் நிதிக்கூற்று மீதி ரூபா 23,242 தொகையால் அதிகரித்துக் காணப்படுகின்றது.

(ஏ) பேரேட்டின் படி மீளாய்வாண்டிற்காக அறவிடப்பட வேண்டிய ஆதனவரி வருமானம் ரூபா 389,268 தொகையாக இருந்த போதிலும் வருமான செலவுக் கணக்கில் ரூபா 848,505 தொகையாக காட்டப்பட்டமையால் ரூபா 459,237 தொகையால் வருமானம் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

1.3.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற 04 கணக்குகளுக்குரிய கூட்டுமொத்த மீதி ரூபா 22,673,255 ஆகவும் அவற்றுக்குரிய பட்டோலை மீதி ரூபா 23,296,722 தொகையாகவும் காணப்பட்டிருந்தது. இதனால் நிதிக்கூற்றுக்களின் மீதி ரூபா 623,497 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. இவ்வேறுபாடுகள் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. விபரம் வருமாறு.

| விடயம் | நிதிக்கூற்று மீதி | பட்டோலை மீதி | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி நிலுவைகள் | 1,579,107 | 1,975,716 | (396,609) |
| வாடகை நிலுவைகள் | 9,501,606 | 11,114,970 | (1,613,364) |
| ஊழியர் கடன் | 4,215,395 | 4,115,322 | 100,073 |
| கேள்வி வைப்பு | 7,377,117 | 6,090,714 | 1,286,403 |
| | 22,673,225 | 23,296,722 | (623,497) |

1.3.4 தொங்கல் கணக்கு

தொங்கல் கணக்கு செலவு மீதி ரூபா 29,358,517 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்ற போதிலும் அது தொடர்பாக சபையினால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான மீள்நிரப்பத்தக்க ஒதுக்கம் (Replacement Reserved) ரூபா 2,708,694 ஆகக் காணப்பட்ட போதிலும் அதனை சான்றுபடுத்துவதற்கான ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (m) | நகர சபைகள் கட்டளைச் சட்டம் அத்தியாயம் 255 | மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் சுருக்கத்தை பொது மக்களின் தகவலுக்காக அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு சபையால் 2018 ஆகஸ்ட் 29 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (M) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி பிரமாணத்தின் பிரிவு 571 | இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 515,999 தொகையான கேள்வி வைப்புக்கள் நிதிப்பிரமாணத்தின் படி கொடுத்து தீர்ப்பதற்கு அல்லது வருமானத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2017 திசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நகர சபையின் செயற்பாடுகள் ரூபா 14,948,827 செலவினத்திலும் மிகையான வருமானத்தை விளைவித்திருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் செயற்பாடுகள் ரூபா 1,331,526 தொகையான வருமானத்திற்கு மிகையான செலவினத்தை விளைவித்திருந்தது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 வருமான சேகரிப்பு செயலாற்றல்

நகரசபையினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டு தொடர்பாக மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான வருமான நிலுவைகள் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான விடயம் | பாதீடு ரூபா "000" | ஆண்டுக்கான வருமானம் ரூபா "000" | பெறப்பட்ட வருமானம் ரூபா "000" | 2017.12.31 இல் நிலுவை ரூபா "000" | பாதீடு ரூபா "000" | ஆண்டுக்கான வருமானம் ரூபா "000" | பெறப்பட்ட வருமானம் ரூபா "000" | 2016.12.31 இல் நிலுவை ரூபா "000" |
| வீதவரிகள் | 3,626 | 1,178 | 411 | 1,579 | 3,500 | 1,145 | 1,455 | 1,273 |
| வாடகை | 10,706 | 12,610 | 6,812 | 9,501 | 8,471 | 6,569 | 6,571 | 10,585 |
| அனுமதி பத்திர கட்டணம் | 2,605 | 2,783 | 2,783 | - | 2,111 | 2,508 | 2,557 | - |
| ஏனையவை | 3,970 | 6,574 | 2,850 | 11,705 | 3,720 | 3,273 | 719 | - |

#### 2.2.2 வீதவரிகள்

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 255) 160ஆம் பிரிவுக்கு அமைய, நகர சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது 2006 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டின் இறுதி வரை நிலுவையாகவுள்ள ரூபா 1,975,716 கூட்டு மொத்தமான வீதவரிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3 வருமான நிர்வாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீன் சந்தை குத்தகை

2008 ஆம் தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கான மீன் சந்தை குத்தகை நிலுவை ரூபா 6,636,250 தொகையை அறவிட சபை இன்று வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) இறைச்சிக் கடை குத்தகை

2007 ஆம் தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கான இறைச்சிக் கடை குத்தகை நிலுவை ரூபா 2,781,727 தொகையை அறவிட சபை இன்று வரை அறவிட்டிருக்கவில்லை.

(இ) வாராந்த சந்தை, கோழி இறைச்சி மற்றும் கருவாட்டுக் கடை குத்தகை

2009 ஆம் தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கான வாராந்த சந்தை, கோழி இறைச்சி மற்றும் கருவாட்டுக் கடை குத்தகை நிலுவை ரூபா 425,568 தொகையை அறவிட சபை இன்று வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.4 முத்திரைத் தீர்வை

2016 யூன் தொடக்கம் மீளாய்வாண்டின் இறுதிவரை கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணத்தை கணிப்பீடு செய்து பதிவாளர் நாயகத்திடமிருந்து அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றுகை

அ) சுற்றுச்சூழல் பிரச்சினைகள்

சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசமான கரைச்சி வீதிக்கு அருகில் உள்ள ஆற்றுப்பகுதியில் பிரதேச மக்களால் குப்பைகள் கொட்டப்பட்டு வருவதனால் ஆற்றுப்பகுதி மாசடைந்து காணப்படுகின்றது. இதனை சபை துப்பரவு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

ஐக்கிய நாடுகளின் அமைப்பின் அங்கத்துவ நாடுகளின் அரச தலைவர்களின் தலைமையில் 2015 ஆம் ஆண்டு நிலைபேறான அபிவிருத்தி மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் 2030 ஆம் ஆண்டில் அடைந்து கொள்ளப்பட வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை எவ்வித அறிவினையும் கொண்டிருக்கவில்லை.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் பயன்படுத்தப்பட்டு வந்த PP-LL 6921 டிப்பர் வாகனம் 2017 திசெம்பர் 14 ஆம் திகதியன்று விபத்துக்குள்ளாகி சேதமடைந்திருந்த போதிலும் நிதிப்பிரமானம் 104 இன் பிரகாரம் விசாரணைக்குழுவை நியமித்து இழப்புக்களின் பெறுமதி, மற்றும் விபத்துக்கு பொறுப்பான நபர்களை இனங்காணல் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் கணக்காய்வுத் திகதியான 2018 ஆகஸ்ட் 29 ஆம் திகதி வரை வாகனம் திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் சபையின் எல்லைக்குள் காணப்படும் 07 வட்டாரங்களில் 05 வட்டாரங்களுக்கான ஆதன மதிப்பீடு விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் சபைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் சபையினால் 1999 ஆம் ஆண்டு மதிப்பீட்டு பெறுமதி அடிப்படையிலேயே ஆதனவரி அறவிடப்படுகின்றது. மேலும் 02 வட்டாரங்களுக்கான மதிப்பீடு இன்றுவரை செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) கனேடிய சர்வதேச அபிவிருத்தி முகவர் நிறுவனத்தின் நிதியளிப்பின் கீழ் 2008 ஆம் ஆண்டு நகரசபைக்கு வழங்கப்பட்டு மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட 26 தையல் இயந்திரங்களில் 22 தையல் இயந்திரங்கள் பழுதடைந்த நிலையில் பயனற்றுக் காணப்படுகின்ற போதிலும் அவற்றைத் திருத்திப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.3 மனிதவள முகாமைத்துவம்

சபையின் கணக்காளர் பதவி கடந்த 07 வருடகாலமாக வெற்றிடமாகக் காணப்பட்ட போதிலும் அதனை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

3.4 சொத்து முகாமைத்துவம்

3.4.1 சொத்துக்களைப் பதிதல்

ஏனைய நிறுவனங்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட 17 வாகனங்கள் 11 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதும் அவற்றை சபையின் பெயருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.4.2 வருடாந்த இருப்பு கணிப்பீடு

2017 ஆம் ஆண்டின் இருப்புக் கணக்கெடுப்பின் போது சபையினால் பராமரிக்கப்படும் கிண்ணியா பொது நூலகத்தில் 1744 புத்தகங்களும், ஆலங்கேணி பொது நூலகத்தில் 574 புத்தகங்களும், மகுறூப் நூலகத்தில் 08 புத்தகங்களும் கூட்டுமொத்தமாக 2326 புத்தகங்கள் கணக்கெடுப்பு சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

ஓய்வூதிய திணைக்களத்தின் 2011 பெப்ரவரி 24 ஆம் திகதிய 02/2011 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 4.1 ஆம் பிரிவின் பிரகாரம் உள்@ராட்சி நிறுவனங்களில் அமைய மற்றும் தற்காலிக அடிப்படையில் நியமிக்கப்பட்ட ஊழியர்களுக்காக அரச சேவை சேமலாப நிதியத்திற்கு பங்களிப்பு பணம் செலுத்தப்படுதல் வேண்டும். எனினும் இதற்கு மாற்றமாக சபையில் கடமையாற்றிய ஊழியர்களுக்காக அரச சேவை சேமலாப நிதியத்திற்குப் பதிலாக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியங்களுக்கும் பங்களிப்புச் செய்யப்பட்டதுடன் 2012 சனவரி தொடக்கம் 2015 ஏப்ரல் வரை ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான பங்களிப்புப் பணத்தையும், 2014 மார்ச் தொடக்கம் 2015 பெப்ரவரி மாத காலத்திற்கான ஊழியர் சேமலாப நிதியத்துக்கான பங்களிப்புப் பணத்தையும் குறித்த காலத்தில் செலுத்தாத காரணத்தினால் அந்நிதியங்களுக்கும் ரூபா 482,710 தொகை தண்டப்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

3.6 பெறுகை நடைமுறைகள்

3.6.1 பெறுகைத் திட்டம்

தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் 128 ஆம் இலக்க 2006 மார்ச் 24 ஆம் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான பெறுகை திட்டம் சபையினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட செலவினம் மற்றும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையில் 15% தொடக்கம் 68% வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடானது முகாமையின் ஒரு வினைத்திறனான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் ஆதனவரி மதிப்பீடு செய்யப்பட்டதற்கிணங்க ரூபா 389,268 தொகையாகக் காணப்பட்ட போதிலும் பாதீடு தயாரிக்கும் போது எதிர்பார்க்கப்படும் ஆதனவரி ரூபா 3,000,000 தொகையென உள்ளடக்கப்பட்டிருந்தது.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் ஒவ்வொரு கட்டுப்பாடுகளிற்கு எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் மீது விசேட கவனம் செலுத்த வேண்டும்.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) பேரேடுகள் நாளது வரையாக முறையாக பேணப்படல். |
| | (ii) சொத்துக்கள் செலவீனங்களின் தன்மை அடிப்படையில் வகைப்படுத்தப்படல். |
| | (iii) பிரதான பேரேடு பேணப்படுதல் வேண்டும். |
| (ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படல். |
| (இ) வருமான அறவீட்டு முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படல். |